Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 125 | உள்ளூர் - 05.05.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 125 | வெளியூர் - 06.05.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


யூனியன் வங்கி 1865 காலிப்பணியிடங்கள்!

பதவியை ராஜினாமா செய்த ஸ்டாலின்!

உடல்நல தொடர்பான ஜோதிட பார்வை!

பிஎப் பணம் விதிமுறையில் முக்கிய மாற்றம்!

## அசாமில் ‘ஹாட்ரிக்’ வெற்றியை பதிவு செய்த பா.ஜ.க.!

கவுகாத்தி, மே. 05–

வடகிழக்கு மாநிலமான அசாமில், 10 ஆண்டுகளாக ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடந்து வருகிறது. அங்குள்ள 126 தொகுதிகளிலும் கடந்த மாதம் 9–ந் தேதி ஒரே கட்டமாக சட்டசபை தேர்தல் நடந்தது. 2 கோடியே 50 லட்சம் வாக்காளர்களில், 85.96 சதவீதம்பேர் வாக்களித்தனர். 722 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பா.ஜ.க. காங்கிரஸ் இடையே கடும் போட்டி நிலவியது.

இந்நிலையில், நேற்று வாக்கு எண்ணிக்கை நடந்தது. 35 மாவட்டங்களில் அமைந்துள்ள 40 வாக்கு எண்ணும் மையங்களில் காலை 8 மணிக்கு பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. ஆரம்பத்தில் இருந்தே பா.ஜ.க. முன்னிலையில் இருந்தது. ஜாலுக்பாரி தொகுதியில் போட்டியிட்ட முதல்–மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா 89 ஆயிரத்து 434 வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளர் பிடிஷா நியோக்கை தோற்கடித்து,



அமோக வெற்றி பெற்றார்.

காங்கிரசின் முதல்–மந்திரி வேட்பாளராக அறியப்பட்ட கவுரவ் கோகாய் ஜோர்ஹட் தொகுதியில் 23 ஆயிரத்து 182 வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் தேவபிரதா சைக்கியாவும் தோல்வியை தழுவினார்.

சபாநாயகர் பிஸ்வஜித் தைமரி, தமுல்பூர் தொகுதியில் வெற்றி பெற்றார். பா.ஜ.க.வின் கூட்டணி கட்சியான அசாம் கண பரிஷத்தின் தலைவர் அதுல் போரா வெற்றி பெற்றார். பியுஷ் ஹசாரிகா, ரனோஜ் பேகு, அஜந்தா நியோக், அதுல் போரா உள்ளிட்ட மாநில மந்திரிகள் பலர் வெற்றி பெற்றனர். ரைஜோர் தளத்தின் தலைவர் அகில் கோகாய், சிப்சாகர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

பா.ஜ.க. கூட்டணி தொடர்ந்து வெற்றி முகமாக காணப்பட்டது. வாக்கு எண்ணிக்கையின் இறுதியில், பா.ஜ.க. கூட்டணி 101 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 3–வது தடவையாக ஆட்சியை கைப்பற்றி ‘ஹாட்ரிக்’ சாதனை படைத்தது. மொத்தம் உள்ள 126 தொகுதிகளில், குறைந்தபட்ச பெரும்பான்மைக்கு 64 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். ஆனால், மூன்றில் இருபங்குக்கு மேலான பெரும்பான்மையை பா.ஜ.க. கூட்டணி பெற்றுள்ளது.

## திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யும் விஜய்...?

சென்னை, மே. 05–

திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை தவெக தலைவர் விஜய் ராஜினாமா செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய், சென்னை நீலாங்கரையில் வசித்து வருகிறார். எனவே, அவர் அடிக்கடி வந்து செல்லும் வகையில் பெரம்பூர் தொகுதியே அருகில் இருப்பதால், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.வாகவே அவர் தொடர விரும்புவார் என்று கூறப்படுகிறது.



திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்யும் பட்சத்தில், அங்கு இடைத்தேர்தல் நடத்தியாக வேண்டும். மற்ற கட்சிகளில், தற்போதைய வேட்பாளர்களே மீண்டும் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது. அதாவது தி.மு.க. சார்பில் இனிகோ இருதயராஜ், அ.தி.மு.க. சார்பில் க.ராஜசேகரன், நா.த.க. சார்பில் கிருஷ்ணசாமி ஆகியோர் மீண்டும் போட்டியிடுவார்கள் என கூறப்படுகிறது.


இதைபோல தவெக சார்பில் லால்குடி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடந்த கு.ப.கிருஷ்ணனை திருச்சி கிழக்கு தொகுதியில் களமிறக்க விஜய் திட்டமிட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சட்டசபை தேர்தல்: ஆயிரத்திற்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் வென்றவர்கள் யார்..?

சென்னை, மே. 05–

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில், 15 தொகுதியில் 1,000–க்கும் குறைவான வாக்குகளே வெற்றி – தோல்வியை நிர்ணயித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:–




கம்பம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ராமகிருஷ்ணனை த.வெ.க. வேட்பாளர் ஜெகநாத்மிஸ்ரா 751 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் ராஜீவ்காந்தியை த.வெ.க. வேட்பாளர் அருள் விக்னேஷ் 798 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கன்னியாகுமரி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ஆர்.மகேஷை அ.தி.மு.க. வேட்பாளர் தளவாய்சுந்தரம் 214 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கோவில்பட்டி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் கருணாநிதி, த.வெ.க. வேட்பாளர் பாலசுப்பிரமணியனை 843 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

குளித்தலை தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ஏ. சந்திரன், த.வெ.க. வேட்பாளர் ஜி.பாலசுப்பிரமணியை 579 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். கும்பகோணம் தொகுதி யில் த.வெ.க. வேட்பாளர் வினோத், தி.மு.க. வேட்பாளர் அன்பழகனை 679 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

பழனி தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் ரவி மனோகரன், த.வெ.க. வேட்பாளர் பிரவீண்குமாரை 693 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

பரமத்தி வேலூர் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் சேகர், தி.மு.க. வேட்பாளர் மூர்த்தியை 308 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

போளூர் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் அபிஷேக், தே.மு.தி.க. வேட்பாளர் சரவணனை 227 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

திண்டிவனம் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் வன்னி அரசு, அ.தி.மு.க. வேட்பாளர் அர்ஜுனனை 734 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

திருக்கோவிலூர் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் பழனிசாமி, த.வெ.க. வேட்பாளர் பரணி பாலாஜியை 285 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

திருப்பத்தூர் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் ஸ்ரீனிவாச சேதுபதி, தி.மு.க. வேட்பாளர் பெரியகருப்பனை 1 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

உதகமண்டலம் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் போஜராஜன், தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் இப்ராகிம்மை 976 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

வேப்பனஹள்ளி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ஸ்ரீனிவாசன், அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி.முனுசாமியை 138 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

விக்கிரவாண்டி தொகுதியில் பா.ம.க. வேட்பாளர் சிவக்குமார், த.வெ.க. வேட்பாளர் விஜய் வடிவேலை 910 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

## கவர்னருக்கு தவெக தலைவர் கடிதம்...

# அடுத்த நகர்வு...?

### பரபரக்கும் அரசியல் களம்...!!

சென்னை, மே. 05–

தமிழக சட்டசபை தேர்தல் ஒரே கட்டமாக கடந்த 23–ந்தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் விஜய்யின் த.வெ.க. தனித்து களம் கண்டது. தி.மு.க. காங்கிரஸ், தே.மு.தி.க.. கம்யூனிஸ்டு, வி.சி.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளுடனும், அ.தி. மு.க. பா. ஜனதா, பா.ம.க.. அ.ம.மு.க. உள்ளிட்ட கட்சிகளுடனும் களம் இறங்கின. நாம் தமிழர் கட்சி வழக்கம்போல் தனித்து போட்டியிட்டது.

234 தொகுதிகளில் 4,034 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். தமிழகத்தில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 5.73 கோடியாகும். இதில் 4 கோடியே 87 லட்சத்து 919 பேர் வாக்களித்த னர். இதுவரை தமிழக வரலாற்றில் இல்லாத அளவுக்கு 85.10 சதவீதம் வாக்குகள் பதிவானது.



தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நேற்று காலை 8 மணிக்கு தொடங்கியது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. அதன் முடிவுகள் வரத் தொடங்கியதும், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அதிக வாக்குகளை பெற்று முன்னிலையில் இருந்து வந்தது. த.வெ.க. வேட்பாளர்கள் முன்னிலை என்பது அதிக வாக்குகள் வித்தியாசத்தில் இருந்தது. ஆனால் அ.தி.மு.க. வும், தி.மு.க.வும் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் மாறி மாறி முன்னிலை பெற்று வந்தன. இறுதியாக த.வெ.க. 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. தி.மு.க. கூட்டணி 74 இடங்களை பெற்றது. அ.தி.மு.க. கூட்டணி 53 இடங்களை பெற்றது. இதன் மூலம் அதிக இடங்களை பெற்ற தனிப்பெரும் கட்சியாக த.வெ.க உருவெடுத்தது.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில் பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை. ஆனால் த.வெ.க.வுக்கு, அந்த அளவுக்கு பெரும்பான்மை இல்லை. இருந்தாலும் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள விஜய் ஆட்சியை அமைக்க கவர்னரிடம் உரிமை கோருவார் என்று தெரிகிறது. கவர்னரும் அதற்கு அனுமதி அளிப்பார். அதனால் விஜய் முதல் – அமைச்சராக பொறுப்பேற்றபின்பு சட்டசபையை குறிப்பிட்ட தினங்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

இந்த நிலையில், தமிழக சட்டசபை தேர்தலில் 108 இடங்களில் வென்றுள்ள நிலையில் ஆட்சியமைக்க அழைப்பு விடுக்க கோரி தமிழக கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு தவெக தலைவர் விஜய் மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பி உள்ளார். 2 வாரங்களில் பெரும்பான்மையை நிரூபிக்க தயார் என கடிதத்தில் தவெக கூறியுள்ளது. இந்த கடிதத்திற்கு கவர்னர் விரைவில் பதில் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது த.வெ.க. பெரும்பான்மைக்கு கூடுதலாக 12 இடங்கள் தேவைப்படுகிறது. எனவே தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சிகள், தே.மு.தி.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.க. ஆகியோர் விஜய்க்கு ஆதரவு அளிப்பார்கள் என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது. அப்படி ஒரு ஆட்சி அமைந்தால், தமிழகத்தில் முதல்முறையாக மலரும் கூட்டணி ஆட்சி இதுவாகத்தான் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக விஜய் ஆலோசனை...

## தவெக எம்.எல்.ஏ.க்களை ஈ.சி.ஆரில் தங்கவைக்க ஏற்பாடு!







சென்னை, மே 05–

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் நேற்று காலை வெளியானது. நொடிக்கு, நொடி தேர்தல் முடிவுகள் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆரம்பம் முதலே த.வெ.க. முன்னிலை வகித்தது. நேரம் செல்ல, செல்ல த.வெ.க. வெற்றி உறுதி செய்யப்பட்டது. 108 தொகுதிகளில் முன்னிலை பெற்று, த.வெ.க. தனிபெரும் கட்சியாக உருவெடுத்தது. த.வெ.க.வின் வெற்றியை தமிழகம் முழுவதும் த.வெ.க.வினர் வெடி, வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொண்டாடி மகிழ்ந்தனர்.

பெரம்பூர், திருச்சி கிழக்கு என 2 தொகுதிகளிலும் விஜய் வெற்றி வாகை சூடினார். தமிழகம் முழுவதும் த.வெ.க. வேட்பாளர்களின் வெற்றி செய்தியை கேட்டு, விஜய் உற்சாகம் அடைந்தார். வெற்றி பெற்றவர்கள் உடனடியாக பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்திற்கு வர வேண்டும் என்று போன் மூலம் விஜய் அறிவுறுத்தினார். அதனை ஏற்று தேர்தலில் வெற்றி பெற்ற த.வெ.க. வேட்பாளர்கள் சென்னை விரைந்தனர். இந்த நிலையில், நீலாங்கரை உள்ள வீட்டில் இருந்து புறப்பட்டு பனையூர் அலுவலகம் சென்ற விஜய்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் வளாகத்தில் உள்ள தவெக கொள்கை தலைவர்கள் சிலைகளுக்கு விஜய் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதன்பின்னர் வெற்றி பெற்ற வேட்பாளர்களை நேரில் சந்தித்து விஜய் பாராட்டினார்.

தொடர்ந்து தவெக எம்.எல்.ஏ.க்களுடன் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். பெரும்பான்மைக்கான எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு பெறுவது குறித்து தவெக நிர்வாகிகளுடன் 1 மணி நேரத்திற்கு மேல் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை என்ற நிலையில் தவெக 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்த கூட்டத்தில் விஜய் சட்டசபை த.வெ.க. குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட உள்ளார். இதற்கான கடிதத்தில் த.வெ.க. வேட்பாளர்கள் கையெழுத்திடுகின்றனர்.

மேலும் சென்னை வந்துள்ள தவெக எம்.எல்.ஏ.க்களை ஈ.சி.ஆரில் உள்ள ஒரு ரிசார்ட்டில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெரும்பான்மை கிடைக்காத நிலையில் பிற கட்சிகளின் ஆதரவை நாட திட்டமிடப்பட்டுள்ளது. இன்றோ அல்லது நாளையோ கவர்னரை சந்தித்து ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கக்கோரி விஜய் கடிதம் அளிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 05.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 22-ம் தேதி

# திமுக, அதிமுகவை முடிச்சுவிட்ட விஜய்!

2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் மாநிலத்தின் அரசியலையே மாற்றி அமைத்துள்ளது. திமுக, அதிமுக என பாரம்பரிய திராவிட கட்சிகள் பலத்த அடியை வாங்கி இருக்கின்றன. இப்போதான் கட்சி ஆரம்பிச்சாங்க அதுக்குள்ள ஜெயிச்சுடுவாங்களா, எல்லா தொகுதிக்கும் போனாரா, வாக்கு கேட்டாரா என பல விமர்சனங்களையும் அடித்து துவம்சம் செய்திருக்கிறார் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய். விஜய் அனைத்து தொகுதிகளுக்கும் நேரில் சென்று வாக்கு கேட்கவே இல்லை. ஏன் பாதி நாட்கள் விஜய் பிரச்சாரத்திற்கு செல்லவே இல்லை. பாதிக்கு மேற்பட்ட தொகுதிகளுக்கும் போகவில்லை. ஆனாலும் மக்கள் விஜய் எனும் ஒற்றை ஆளுக்காக திரளாக வாக்களித்துள்ளார்கள். விஜய் குறைந்த எண்ணிக்கையிலேயே பிரசாரம் செய்திருந்தாலும் அனைத்து தொகுதிகளிலேயே நானே போட்டியிடுவதாக நினைத்து மக்கள் வாக்களிக்க வேண்டும் என கூறினார். அதை தான் மக்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். பெரும்பாலான தொகுதிகளில் தங்கள் தொகுதி தவெக வேட்பாளர் யாரென்றே பலருக்கும் தெரியாது. அப்படியிருந்தும் மக்கள் தங்களது வாக்குகளை தவெக–விற்கு ஊதித் தள்ளியிருக்கிறார்கள். அதாவது விஜய், விசில் சின்னம் என்பது மக்கள் மத்தியில் பதிந்திருக்கிறது. அதுவும் மிக குறுகிய காலத்தில் என்பது தான் ஆச்சர்யம்.

தவெகவின் தேர்தல் வியூகமே விஜய் மற்றும் விசில் சின்னம் மட்டும் தான். எந்த தொகுதியிலும் தவெக வேட்பாளர்களை முன்னிலைப்படுத்தவில்லை மாறாக விஜய் எனும் நபரை தான் முன்னிலைப்படுத்தியது. அது தான் தற்போது தவெகவிற்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளது.

முதல் தலைமுறை வாக்காளர்கள் மட்டுமல்ல, ஏராளமான பெண்கள் ஓட்டும் தவெகவுக்கு சென்றுள்ளது. திமுக, அதிமுகவிடம் பணத்தை வாங்கிவிட்டு ஏராளமான வாக்காளர்கள் தவெகவுக்கு வாக்களித்துள்ளனர். அந்த வகையில் திமுகவின் இரண்டாவது முறை தொடர்ந்து ஆட்சி என்ற கனவு தகர்ந்துவிட்டது, மீண்டும் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற அதிமுகவின் கனவும் கலைந்துவிட்டது. இப்படி திரளான மக்கள் தவெகவுக்கு வாக்களிக்க பல காரணங்கள் உண்டு. குறிப்பாக ஆளும்கட்சி மீதான அதிருப்தி வாக்குகள் சரமாரியாக விஜய்–இன் தவெகவுக்கு விழுந்திருப்பது தெரிய வருகிறது. இரண்டு பெரும் கட்சிகளின் கூட்டணியை மீறியும் தனியாக நின்று ஒரு கட்சி இத்தனை ஆதரவைப் பெற்றிருக்கிறது. இதை ஒரு விரல் புரட்சி என்றே மக்கள் கூறுகின்றனர். ஆள் பலம், கட்சி பலம், அரசியல் செல்வாக்கு என அனைத்தையும் சுக்கு நூறாக உடைத்து போட்டுள்ளார் விஜய்.

திமுக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி தந்துள்ளது மக்கள் அரசியலில் அனுபவம் உள்ளவர்களுக்கே வாய்ப்பு தருவார்கள் என்ற அரசியல் விமர்சகர்களின் கருத்துகளை எல்லாம் தவெக தூக்கி சாப்பிட்டுவிட்டது. இந்தியாவின் அழகே அதன் ஜனநாயகமும் அதன் மக்களும் தான். இவர்கள் எந்த நேரத்தில் எந்த முடிவினை எடுப்பார்கள், யாருக்கு வாய்ப்பு தருவார்கள், யாரின் வாய்ப்பை தட்டி கழிப்பார்கள் என்பதை ஒரு போதும் கணிக்க முடியாது என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

# பிஎப் எடுப்பவர்களுக்கு நற்செய்தி! வந்துவிட்டது புதிய Form 121!





EPFO : வருங்கால வைப்பு நிதி வைத்திருப்பவர்களுக்கு ஒரு முக்கியமான செய்தி. நீண்ட காலமாக அமலில் இருந்த படிவம் 15G மற்றும் 15H ஆகியவற்றை மத்திய அரசு அதிரடியாக நீக்கியுள்ளது. வருமான வரிச் சட்டம் 2025ன் கீழ், ஏப்ரல் 1 முதல் இந்த இரண்டு படிவங்களுக்கும் பதிலாக Form 121 எனும் ஒரே ஒரு படிவம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**டிடிஎஸ் குழப்பத்துக்கு தீர்வு:**

இதுவரை, பிஎப் பணத்தை எடுக்கும்போது TDS Exemption பெற வேண்டுமானால், உங்கள் வயதைக் கணக்கில் கொள்ள வேண்டும். 60 வயதுக்குட்பட்டவர்கள் 15G படிவத்தையும், 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் 15H படிவத்தையும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. பல நேரங்களில், எந்த படிவத்தை நிரப்புவது என்பதில் மக்களுக்குப் பெரும் குழப்பம் நிலவி வந்தது. தவறான படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம் TDS பிடிக்கப்பட்டு, பின்னர் அதை Refund பெற அலைக்கழிக்கப்படும் சூழல் இருந்தது. இனி அந்த கவலை வேண்டாம். நீங்கள் இளைஞராக இருந்தாலும் சரி, மூத்த குடிமகனாக இருந்தாலும் சரி, இனி படிவம் 121 ஒன்றே போதுமானது.

# தூத்துக்குடி தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் உள்பட 13 பேர் டெபாசிட் இழந்தனர்




தூத்துக்குடி, மே. 05–

தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் த.வெ.க. தலைவர் விஜயின் நண்பரும், நடிகருமான ஸ்ரீநாத், தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் கீதாஜீவன், அ.தி.மு.க வேட்பாளர் முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் உள்பட 15 பேர் களத்தில் இருந்தனர். இந்த தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று தூத்துக்குடி வ.உ.சி. பொறியியல் கல்லூரி மையத்தில் நடந்தது. ஓட்டு எண்ணிக்கை தொடங்கியது முதலே த.வெ.க. வேட்பாளர் ஸ்ரீநாத் அதிக ஓட்டுகள் பெற்று முன்னிலை வகித்து வந்தார். இறுதியில் அவர் 1 லட்சத்து 536 ஓட்டுகள் பெற்று வெற்றிபெற்றார். அவருக்கு அடுத்தபடியாக கீதா ஜீவன் 62 ஆயிரத்து 805 ஓட்டுகளை பெற்று தோல்வி அடைந்தார். இதன்மூலம் த.வெ.க. வேட்பாளர் 37 ஆயிரத்து 731 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

மேலும் இந்த தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் உள்பட 13 பேரும் தோல்வியை தழுவினர். இந்த தொகுதியில் பதிவான வாக்குகளில் 6–ல் ஒரு பங்கு ஓட்டு பெற்றால் மட்டுமே டெபாசிட் தொகை திரும்ப வழங்கப்படும். ஆனால் இந்த தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க வேட்பாளர் சி.த.செல்லப்பாண்டியன் 26 ஆயிரத்து 213 வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளார். இதனால் அவர் உள்பட 13 பேர் தங்களது டெபாசிட் தொகையை இழந்துள்ளனர்.

## மியூச்சுவல் ஃபண்ட் முதலீட்டாளர்களுக்கு

# செபியின் அதிரடி பாதுகாப்பு: இனி உங்கள் பணம் பாதுகாப்பாக இருக்கும்!




புதுடெல்லி, மே. 05–

மியூச்சுவல் ஃபண்ட் முதலீட்டாளர்களுக்கு ஒரு சூப்பர் அப்டேட்! ஆன்லைன் மோசடிகளில் இருந்து உங்கள் முதலீட்டைப் பாதுகாக்க செபி (SEBI) ஒரு புதிய வசதியைக் கொண்டு வந்துள்ளது. 'டெபிட் ப்ரீஸ்' (Debit Freeze) எனப்படும் இந்த வசதி மூலம், முதலீட்டாளர்கள் தங்கள் மியூச்சுவல் ஃபண்ட் ஃபோலியோக்களை தாங்களாகவே லாக் செய்து கொள்ளலாம். இதன் மூலம் உங்கள் அனுமதியின்றி யாரும் உங்கள் ஃபண்டுகளை விற்கவோ (Redeem), மாற்றவோ (Switch/Transfer) முடியாது. ஏப்ரல் 30, 2026 முதல் அமலுக்கு வந்துள்ள இந்த வசதி, தற்போது 'MF Central' தளத்தில் நேரலையில் உள்ளது. பல முன்னணி மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனங்களும் இந்த வசதியை வழங்கத் தொடங்கியுள்ளன.

# கூட்டணி ஆட்சி அமைக்க விஜய் அழைப்பு விடுத்தால் ஆலோசித்து முடிவு: கம்யூனிஸ்டு கட்சிகள் தகவல்!



சென்னை, மே. 05–

கூட்டணி ஆட்சி அமைக்க இதுவரை தவெகவிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை; தவெக அழைத்தால் மாநில செயற்குழு, மாநில நிர்வாகக் குழுவை கூட்டி ஆதரவு அளிக்கலாமா? இல்லையா? என்பது பற்றி ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று கம்யூனிஸ்டு கட்சிகளான (சிபிஎம், சிபிஐ) தெரிவித்துள்ளன. சட்டசபை தேர்தலில் சிபிஎம், சிபிஐ தலா ஒரு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன. இதைபோல தவெகவுக்கு ஆதரவு அளிக்க காங்கிரஸ் கட்சியும் ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. தனிப்பெரும் கட்சியான தவெக அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில் பிற கட்சிகளின் ஆதரவை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

# பிஎப் பணம் எடுக்கும் விதிமுறையில் முக்கிய மாற்றம்!




புதுடெல்லி, மே. 05–

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பான EPFO, தனது 7 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டுள்ளது. இனி வருங்கால வைப்பு நிதி தொகையை ஏடிஎம் கார்டுகள் மூலம் நேரடியாகப் பெற்றுக் கொள்ளும் வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதற்கான தொழில்நுட்ப மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந்துள்ளதாகத் தெரிகிறது. தற்போதுள்ள நடைமுறைப்படி, பிஎப் தொகையைத் திரும்பப் பெற ஆன்லைனில் விண்ணப்பித்து, அது ஒப்புதல் பெற்று வங்கிக்கு வர சில நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. ஆனால், இந்த புதிய டிஜிட்டல் சீர்திருத்தம் 3.0 மூலம், அவசரத் தேவைகளுக்காக உறுப்பினர்கள் நேரடியாக ஏடிஎம் இயந்திரங்கள் மூலம் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்

**அறிமுகம்**

மத்தியில் பிரதமர் மோடி தலைமையிலான மூன்றாவது அரசு அமைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் விதமாக, அடுத்த மாதம் இந்தச் சேவை முறைப்படி தொடங்கி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, மே 30 ஆம் தேதியுடன் தற்போதைய அரசு 12 ஆண்டுகால ஆட்சியை நிறைவு செய்கிறது.

இந்த முக்கிய தினத்தில் பிரதமரால் இந்த வசதி தொடங்கி வைக்கப்ப டும் என்று தொழிலாளர் அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏடிஎம் மூலம் எவ்வளவு பணத்தை ஒரே நேரத்தில் எடுக்க முடியும் என்பது குறித்த வரம்பு மற்றும் விதிமுறைகள் இந்தத் தொடக்க விழாவின் போது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் தொடர்ந்து மூன்றாவது முறையாக போட்டியிட்டு ஹாட்ரிக் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக்கொண்டார்.

# நிலா இலக்கிய மன்றம் 13-ம் ஆண்டு விருது வழங்கி கவிஞர்களுக்கு பாராட்டு விழா!

மதுரை, மே. 05–


மதுரை நிலா இலக்கிய மன்றம் 13ஆம் ஆண்டு விருது வழங்கி பாராட்டு விழா வடக்கு மாசி வீதி மணியம்மை மழலையர் பள்ளியில் நடைபெற்றது. விழாவில் நிலா இலக்கிய மன்றத் தலைவர் கவிக்குயில் கணேசன் வரவேற்று பேசிட புரட்சி கவிஞர் மன்ற தலைவர் பி.வரதராசன் தலைமை ஏற்க முன்னாள் காவல் கண்காணிப்பாளர் ஆ.மணி வண்ணன், மதுரை மணி நாளிதழ் ஆசிரியர் டாக்டர்.பி. பாண்டியராஜன் முன்னிலை வகிக்க,

தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத் தலைவர் சுலைகாபானு சிறப்புரையாற்றிட, த.சி.எ.க.சங்க செயலாளர் நஜிமுதீன், இளைய நேதாஜி வே.சுவாமிநாதன், நிலா இலக்கிய மன்ற இணைத்த லைவர் ரத்தீஸ்பாபு, கவிஞர் குமாரிலெட்சுமி, முனைவர் சப்ராபிபி அல்லமீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிட முனைவர் அ. ஜோஸ்பின்மேரி எழுதிய எட்டுத்தொகை காட்டும் தமிழர் பண்பாடு நூலுக்கும், கவிஞர் மு.அருணகிரி எழுதிய அள்ளிப்பருக நீளும் கைகள் நூலுக்கும் சாலையில் கண்டெடுத்த தொகையை காவல் துறையிடம் ஒப்படைத்த பிரியாவிற்கு நேர்மை நிலா விருதும், ரோஜா நவீன் குமாருக்கு தையற்கலை நிலா விருதும் வழங்கப்பட்டது.





மேலும் அரங்கத்தில் கவிபாடிய கவிஞர்களுக்கு கவிநிலா எனும் பாராட்டு சான்றும் வழங்கப்பட்டது. விழாவில் சிவாலயா நாட்டியப்பள்ளி ஆசிரியர் சிவரஞ்சனி மற்றும் கலாலய மியூசிக் அகாடமி ஆசிரியர் சுதா சந்திரன் குழுவினர்கள் நடனம் ஆடிய மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் ரோட்டரி நாகராஜன், ஜே.சி.அமைப்பு சர்மிளா ரத்தீஸ்பாபு, நிலா அறக்கட்டளை பொருளாளர் ஆனந்தி கணேசன், பொற்கொடி, நிலா முருகேசன், கவிஞர்கள் பொன்பாண்டி, பாலகிருஷ்ணன், சூரியகலா, சூரியபிரபா, திரவியம், தேசிய மணி உட்பட பலர் கலந்து கொள்ள கவிஞர் பிரபு நன்றி கூறினார்.



# நவகிரகங்கள், ராசிகள், பாவங்கள்: உடல்நலத்துடன் தொடர்பான ஜோதிட பார்வை!



ஜோதிட சாஸ்திர பலன் கிரகங்கள் மற்றும் அதை அடிப்படையாக கொண்ட ராசிகளை குறிப்பிடக்கூடியதாக உள்ளன. இவற்றின் அமைப்பு உடல் நலம், உடல் உறுப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்களை குறிப்பிடக்கூடியன. குறிப்பாக நோய் என்பது 6ம் பாவம் (நோய் ஸ்தானம்), 8ம் பாவ (நீடித்த நோய்), 12ம் ஸ்தானம் மருத்துவ செலவு, சோர்வு ஆகியவை உடல் நல விஷயங்களை குறிப்பிடக்கூடியதாக பங்கு வகிக்கின்றன. உடல் நலனை நவகிரகங்கள் எப்படி கட்டுப்படுத்துகின்றன, ஒவ்வொரு கிரகத்திற்கும் உரிய உறுப்புகளும் அதற்குரிய நோய்கள் எப்படி உருவாஅகும் என சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளன.

சூரியன் தலை, இதயம், எலும்பு, இரத்தம்
சந்திரன் மனம், மார்பு, நீர்ச்சத்து, இடது கண்
செவ்வாய் இரத்தம், தசைகள், காயம், அழற்சி
புதன் நரம்புகள், தோல், சுவாசம், பேச்சு
குரு கல்லீரல், கொழுப்பு, தொடை, ஜீரணம்
சுக்கிரன் சிறுநீரகம், இனப்பெருக்க உறுப்புகள், சருமம்
சனி எலும்பு, முழங்கால், பற்கள், நரம்பு வலி
ராகு விஷம், கிருமி, திடீர் கோளாறுகள்
கேது தோல், நரம்பு, மறைநோய், திடீர் தாக்கங்கள்

உடல்நலத்தில் கவனிக்க வேண்டிய ஜோதிடச் சுட்டுகள்

உடல்நல பலனை மதிப்பிடும்போது, குறிப்பாக கீழ்கண்ட அம்சங்கள் முக்கியம்:

6ஆம் பாவம் நோய், எதிர்ப்பு சக்தி, உடல் சோர்வு
8ஆம் பாவம் நீடித்த நோய், மறைநோய், மீண்டும் வரும் கோளாறுகள்
12ஆம் பாவம் மருத்துவச் செலவு, மருத்துவமனை, தூக்கக் குறைவு
லக்னம் மற்றும் லக்னாதிபதி உடல் பலம், மீளும் திறன்
சூரியன் உயிர்சக்தி
சந்திரன் மனநிலை
சனி, ராகு, கேது நீடித்த, திடீர் அல்லது கண்டறிய கடினமான பிரச்சினைகள்

சிறிய பரிகார வழிகள்

கிரக பலவீனம் காரணமான உடல்நல சிக்கல்களுக்கு பாரம்பரிய ஜோதிடத்தில் சில பரிகாரங்கள் கூறப்படுகின்றன. அவற்றில்:

சூரியன் பலவீனமாக இருப்பின் சூரிய நமஸ்காரம், ஆதித்ய ஹ்ருதயம்
சந்திரன் பலவீனமாக இருப்பின் திங்கள் விரதம், அம்மன் வழிபாடு
செவ்வாய் பாதிப்பில் இருப்பின் முருகன் வழிபாடு
புதன் பலவீனமாக இருப்பின் விநாயகர் அர்ச்சனை
குரு பலம் அடைய வேண்டுமெனில் தட்சிணாமூர்த்தி, குரு வழிபாடு
சுக்கிரன் பாதிப்பில் இருந்தால் மகாலட்சுமி அருள்
சனி, ராகு, கேது பாதிப்பில் இருப்பின் சனீஸ்வர பகவான், சரபேஸ்வரர், நவகிரக வழிபாடு

உடல்நல பலன்கள்

ராசி அடிப்படையிலான உடல்நல பலன்கள் பொதுப் பார்வை மட்டுமே. ஒருவரின் சரியான உடல்நிலை முடிவு ஜன்ம லக்னம், சந்திர ராசி, 6ஆம் பாவம், 8ஆம் பாவம், தசா–புத்தி, கிரக சஞ்சாரம் ஆகியவற்றை வைத்து தனிப்பட்ட முறையில் கணிக்கப்பட வேண்டும். இருந்தாலும், இந்த ஆண்டு எந்த ராசிக்காரர்கள் எந்த உடல் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அறிய இந்த வழிகாட்டி உதவும்.

உடல்நலம் காக்கும் முதல் பரிகாரம் நேர்மையான வாழ்க்கை முறை, ஒழுங்கான உணவு, போதிய உறக்கம், அமைதியான மனநிலை.


# பழனி தொகுதியில் அதிமுக வேட்பாளர் ரவி மனோகரன் வெற்றி!



பழனி, மே. 05–

பழனி சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளர் ரவிமனோகரன் 66 ஆயிரத்து 986 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவருக்கு அடுத்தபடியாக தவெக வேட்பாளர் பிரவீன் குமார் 66, 293 வாக்குகள் பெற்றார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பாண்டி 65 ஆயிரத்து 534 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் வேட்பாளர் முருகேஸ்வரி 6300 வாக்குகள் பெற்றார். தொடர்ந்து வெற்றி பெற்ற அதிமுக வேட்பாளர் ரவி மனோகரன் அவர்களுக்கு வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் அதிகாரிகளால் வழங்கப்பட்டது. அப்பொழுது அவரது தந்தை முன்னாள் எம்எல்ஏ குப்புசாமி, மற்றும் மாவட்ட இளைஞரணி செயலாளர் எஸ் பி அன்வர்தீன், நகர செயலாளர் யூ முருகானந்தம் மற்றும் அதிமுக வினர் உடன் இருந்தனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## கடும் வெயிலில் உடல்நலத்தை பாதுகாக்க உதவும் எளிய வழிகள்!

இந்தியாவில் மார்ச் மாதம் தொடங்கி மே மாதம் வரை வெயில்காலம் கடுமையாக இருக்கும். குறிப்பாக தென் இந்தியாவில் வெப்பநிலை அதிகரித்து பொதுமக்களின் தினசரி வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அதிக வெப்பம் உடல்நலத்தில் பாதிப்புகளை உருவாக்கும் என்பதால் மக்கள் தங்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்களை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த காலத்தில் வெயிலால் ஏற்படும் சோர்வு, தாகம், தலைவலி, உடல் சலிப்பு போன்ற பிரச்சினைகள் அதிகமாக காணப்படுகின்றன. எனவே, உடலை குளிர்ச்சியாக வைத்துக்கொள்வது மற்றும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பது மிகவும் முக்கியமானதாகிறது.

உணவுப் பழக்கங்களில் கவனம் தேவை

வெயில்காலத்தில் உடலுக்கு இலகுவான மற்றும் குளிர்ச்சியை தரும் உணவுகளை எடுத்துக்கொள்வது அவசியம். பழங்கள், காய்கறிகள் மற்றும் அதிக நீர் சத்து கொண்ட உணவுகள் உடலின் நீர்ச்சத்தை சமநிலைப்படுத்த உதவுகின்றன. தர்பூசணி, வெள்ளரிக்காய், முலாம்பழம், மாதுளை போன்ற பழங்கள் உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கின்றன. அதே சமயம் எண்ணெய் அதிகம் உள்ள உணவுகள் மற்றும் மிக காரமான உணவுகளை தவிர்ப்பது நல்லது. இவை உடலில் வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதால் சோர்வு மற்றும் செரிமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தண்ணீர் மற்றும் பானங்களின் முக்கியத்துவம்


வெயில்காலத்தில் உடலில் நீர் சத்து குறைவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும். அதனால் ஒரு நாளுக்கு குறைந்தது 2 முதல் 3 லிட்டர் வரை தண்ணீர் குடிப்பது அவசியம். அதோடு இளநீர், மோர், எலுமிச்சைச் சாறு போன்ற இயற்கை பானங்கள் உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன. இவை உடலில் உள்ள உப்புச்சத்தை சமநிலைப்படுத்தி உடலின் சக்தியை பாதுகாக்கும். அதிக சர்க்கரை கலந்த குளிர்பானங்களை அதிகமாக குடிப்பதை தவிர்ப்பது நல்லது.

வெயிலில் வெளியில் செல்லும் போது முன்னெச்சரிக்கை

மிகவும் கடுமையான வெயில் நேரமான மதியம் 11 மணி முதல் 3 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது பாதுகாப்பானது. அவசியமாக வெளியே செல்ல வேண்டிய சூழலில் குடை பயன்படுத்துவது, தலைக்கு துணி அல்லது தொப்பி அணிவது போன்ற முன்னெச்சரிக்கைகள் அவசியம். மேலும் பருத்தி துணியால் தயாரிக்கப்பட்ட இலகுவான உடைகளை அணிவது உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கும். குழந்தைகள் மற்றும் முதியவர்கள் வெயிலில் அதிக நேரம் இருக்காமல் கவனிப்பது மிகவும் முக்கியம்.

உடல்நலத்தை பாதுகாக்கும் பழக்கங்கள்

வெயில்காலத்தில் போதுமான அளவு ஓய்வு எடுத்துக் கொள்ளுதல் மற்றும் உடலை அதிகமாக சோர்வடையாமல் பாதுகாப்பது அவசியம். அதிக வெப்பம் காரணமாக உடல் நீர்ச்சத்து குறையும்போது மயக்கம் அல்லது உடல்நலக் குறைபாடுகள் ஏற்படலாம். எனவே, தினமும் சீரான உணவு, போதுமான தண்ணீர் மற்றும் சரியான ஓய்வு ஆகியவற்றை கடைப்பிடிப்பது நல்லது. இந்த எளிய பழக்கங்களை பின்பற்றினால் வெயில்காலத்திலும் ஆரோக்கியமான வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்ள முடியும்.



## சினிமா துளிகள்..!

### ராஜமவுலி இயக்கத்தில் "வாரணாசி"யில் 20 நிமிட ராமாயணக் காட்சிகள்!




ராஜமவுலி இயக்கத்தில் மகேஷ்பாபு, பிரியங்கா சோப்ரா, பிருத்விராஜ் நடிக்கும் திரைப்படம், 'வாரணாசி'. ஆக்ஷன் அட்வெஞ்சர் ஃபேன்டஸி படமான இதன் கதையை ராஜமவுலியின் தந்தை, விஜயேந்திர பிரசாத் எழுதியுள்ளார். இப்படம், 2027ம் ஆண்டு ஏப்.7–ல் வெளியாகிறது.

முக்கியமான காட்சிகள் கென்ய காடுகளில் படமாக்கப்பட்டுள்ளன. சர்வதேச அளவில் இப்படத்தைக் கொண்டு செல்ல படக்குழு முடிவு செய்துள்ளது. இதனால் அதிக பட்ஜெட்டில் இப்படம் உருவாகி வருகிறது. மெக்சிகோவில் நடைபெற்ற காமிக் கான் விழாவில் இப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இப்படக்குழு சார்பில் கலந்துகொண்ட தயாரிப்பாளர் எஸ்.எஸ்.கார்த்திகேயா, இந்திய இதிகாசங்களுக்கும் லத்தீன் அமெரிக்கக் கலாச்சாரத்துக்கும் உள்ள ஒற்றுமை குறித்து விளக்கம் அளித்தார்.

"இந்தியாவில் ராமாயணம் மற்றும் மகா பாரதம் போன்ற இதிகாசங்களில் இருந்து நாங்கள் பெருமளவு உத்வேகம் பெறுகிறோம். 'வாரணாசி' படத்தில் சுமார் 20 நிமிடம் நீளமுள்ள ராமாயணக் காட்சிகள் பிரம்மாண்டமாக இடம்பெற்றுள்ளன" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரபல மலையாள நடிகர் சாலை விபத்தில் உயிரிழப்பு!



திருவனந்தபுரம், மே. 05–

அதிகாலையில் எனது (Enathu) பகுதியில் நிகழ்ந்த சாலை விபத்தில் பிரபல மலையாள நடிகர் சந்தோஷ் நாயர் உயிரிழந்ததாகக் காவல்துறையினர் தெரிவித்தனர். காலை சுமார் 6:30 மணியளவில், அவர் பயணித்த கார் ஒரு சரக்கு லாரியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது; இதில் அவரும் அவரது மனைவியும் காயமடைந்தனர். காரின் ஸ்டீயரிங் சக்கரத்தின் மீது மோதியதால் நாயருக்கு நெஞ்சுப் பகுதியில் தீவிர காயங்கள் ஏற்பட்டதாகவும்,

அவரது மனைவிக்கு விலா எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது..

சந்தோஷ் நாயர் தனது திரையுலகப் பயணத்தை 1982–ஆம் ஆண்டு வெளியான 'இது ஞங்களுடைய கத' (Ithu Njangalude Katha) திரைப்படத்தின் மூலம் தொடங்கினார். தொடர்ந்து 100–க்கும் மேற்பட்ட திரைப்படங்களில், கதாநாயகன் மற்றும் வில்லன் கதாபாத்திரங்கள் முதல் துணைக் கதாபாத்திரங்கள் வரை பல்வேறு விதமான வேடங்களில் அவர் நடித்துள்ளார். அவர் கடைசியாக நடித்த 'மோகினியாட்டம்' (Mohiniyattam) திரைப்படம் தற்போது திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.

## மாநிலக் கட்சி அந்தஸ்தை இழக்கும் நாதக!



சென்னை, மே. 05–

2026 சட்டசபைத் தேர்தல் முடிவுகள், நாம் தமிழர் கட்சிக்கு அரசியல் வரலாற்றிலேயே மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

2021 சட்டமன்றத் தேர்தலில் 6.6% வாக்குகளுடன் மூன்றாவது பெரிய வாக்கு வங்கியாக இருந்த நாம் தமிழர் கட்சி, இந்த முறை 4% க்கும் கீழ் சரிந்துள்ளது. இது கட்சியின் எதிர்காலத்திற்கு மிகப் பெரிய சவாலாக மாறியுள்ளது. மாநிலக் கட்சி அங்கீகாரத்தையே இழக்கும் அபாயமும் தற்போது எழுந்துள்ளது.

## தமிழக சட்டசபை தேர்தலில் தோல்வியடைந்த அமைச்சர்கள் விவரம்!



சென்னை, மே. 05–

தமிழக சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றி புதிதாக ஆட்சி அமைக்க உள்ளது. ஆளும் கட்சியான திமுக, பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. திமுக கூட்டணி கட்சி 73 தொகுதிகளையே கைப்பற்றியுள்ளது. அதிமுக கூட்டணி 53 இடங்களை கைப்பற்றியுள்ளது. குறிப்பாக முதல்வர் ஸ்டாலின் உட்பட16 அமைச்சர்கள் இந்த தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர். தேர்தலில் தோல்வியடைந்த அமைச்சர்கள் விவரம் பின்வருமாறு:

* மு.க.ஸ்டாலின் – கொளத்தூர்
* துரைமுருகன் – காட்பாடி
* தியாகராஜன் – மதுரை மத்தி
* கீதா ஜீவன் – தூத்துக்குடி
* மூர்த்தி – மதுரை கிழக்கு
* ஆர்.காந்தி – ராணிப்பேட்டை
* மா. சுப்ரமணியன் – சைதாபேட்டை
* ராஜேந்திரன் – சேலம் வடக்கு
* நாசர் – ஆவடி
* அன்பில்மகேஷ் – திருவெறும்பூர்
* மதிவேந்தன் – ராசிபுரம்
* டி.ஆர்.பி.ராஜா – மன்னார்குடி
* முத்துசாமி – ஈரோடு மேற்கு.

## ஆளுங்கட்சி அவுட்... ஆண்ட கட்சி 3-வது இடம்... புதிய கட்சி முதலிடம்: இது ஒரு விசித்திரமான தேர்தல்!



சென்னை, மே. 05–

தமிழக சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவியது. என்றாலும், தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, த.வெ.க. இடையே தான் யார் ஆட்சிக்கு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், ஆளுங்கட்சியான தி.மு.க. வையும், ஆண்ட கட்சியான அ.தி.மு.க.வையும் பின்னுக்கு தள்ளி, புதிய வரவான த.வெ.க. முதல் தேர்தலிலேயே முத்திரை பதித்து இருக்கிறது. என்றாலும், அருதிப்பெரும்பான்மை கிடைக்காததால், த.வெ.க. ஆட்சி அமைப்பதில் சிக்கல் நீடிக்கிறது. மொத்தத்தில், நடந்து முடிந்த 17–வது சட்டசபை தேர்தலை விசித்திரமான தேர்தல் என்றே கூறலாம்.

ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க., தற்போது 2–வது இடத்திற்கு பின்தங்கிய போதும், முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்ததால், அவரால் எதிர்க்கட்சித் தலைவராக கூட முடியவில்லை.

தமிழ்நாட்டில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் என்ற சாதனையை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நிகழ்த்தி இருந்தாலும், அ.தி.மு.க. 3–வது இடத்திற்கு தள்ளப்பட்டதால், அவரால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை.

முதல் தேர்தலிலேயே முதலிடம் பிடித்தும், பெரும்பான்மை கிடைக்காததால், த.வெ.க. தலைவர் விஜய்யால், முதல்–அமைச்சர் நாற்காலியில் அமர முடியவில்லை. களம் கண்ட 3 சட்டசபை தேர்தலிலும் தனித்து போட்டியிட்டு, ஒரு இடத்தில்கூட நாம் தமிழர் கட்சியால் வெற்றி பெற முடியவில்லை. அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஏற்கனவே கடலூர், திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த நிலையில், இந்த முறை காரைக்குடி தொகுதியில் போட்டியிட்டு, டெபாசிட் கூட பெற முடியவில்லை.

## போர் பதற்றத்துக்கு மத்தியிலும் நாட்டின் உற்பத்திதுறை வளர்ச்சி: கடந்த மாதம் 54.70 புள்ளிகளாக உயர்வு!



புதுடெல்லி, மே. 05–

இந்தியாவின் உற்பத்தித்துறை என்பது பொருளாதாரத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாகும். இது மூலப்பொருட்களை தயாரிப்புகளாக மாற்றி, வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், ஏற்றுமதியை அதிகரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தத் துறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கி, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

"மேக் இன் இந் தியா" போன்ற முயற்சிகள் மூலம் வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்து, இந்தியாவை உலக உற்பத்தி மையமாக மாற்ற உதவுகிறது. இதனால் வேலை வாய்ப்பு அதிகரிப்பு, வருமான உயர்வு, ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் பொருளாதார தன்னிறைவு ஆகியவை ஏற்பட்டு, நாட்டின் மொத்த பொருளாதார முன்னேற்றத்திற்கு உற்பத்தித் துறை முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

தனியார் வங்கியான எச்.எஸ்.பி.சி. மாதந்தோறும் பொருளாதாரத்தின் தூண்களான விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைத்துறைக்கான குறியீட்டை வெளியிட்டு வருகிறது. அதன்படி கடந்த மார்ச் மாதத்துக்கான உற்பத்திதுறை அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன்படி கடந்த மாதத்தில் நாட்டின் உற்பத்தித்துறையின் மொத்த செயல்பாடு குறியீடு 54.7 புள்ளிகளை பெற்று உயர்ந்தது. இது அதற்கு முந்தைய மாதத்தில் பதிவான 53.9 புள்ளிகளை காட்டிலும் 0.8 புள்ளிகள் அதிகமாகும். இது மொத்த செயல்பாட்டு சூழலில் நான்கு ஆண்டுகளில் இரண்டாவது மெதுவான முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

புதிய ஆர்டர்கள், உற்பத்தி, வேலைவாய்ப்பு, வழங்குநர் வினியோக நேரம் மற்றும் கொள்முதல் கையிருப்பு போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் உற்பத்தித்துறை மொத்த செயல்பாடு குறியீடு கணக்கீடப்படுகிறது.

இதுகுறித்து எச்.எஸ்.பி.சி வங்கியின் முதன்மை அதிகாரி பிரஞ்சுல் பண்டாரி கூறுகையில், "போர்ப் பதற்றத்துக்கு மத்தியில் நாட்டின் உற்பத்தித் துறை உயர்ந்துள்ளது. உற்பத்தி, புதிய ஆர்டர்கள் (ஏற்றுமதிகள் உள்பட) மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை மிதமான வளர்ச்சியைக் காட்டியுள்ளதால், இந்திய உற்பத்தித் துறையின் நிலைத்தன்மை தொடர்கிறது" என்றார்.

மத்திய கிழக்கு போர் காரணமாக பணவீக்க அழுத்தம் அதிகரித்துள்ளது. உள்ளீட்டு செலவுகள் 44 மாதங்களில் மிக வேகமாகவும், தயாரிப்பு விலைகள் 6 மாதங்களில் மிக வேகமாகவும் உயர்ந்தன. மொத்த பண வீக்க விகிதம் ஆகஸ்டு 2022–க்கு பிறகு அதிகபட்ச நிலையை எட்டியது. இதன் விளைவாக, உற்பத்தியாளர்கள் கடந்த ஆறு மாதங்களில் அதிக அளவில் தங்கள் விலைகளை உயர்த்தியுள்ளனர்.

## வேலை வாய்ப்பு

### யூனியன் வங்கி 1865 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: தொழிற்பயிற்சி

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 1865 தொழிற்பயிற்சி பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 29.04.2026

கடைசி தேதி: 19.05.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.unionbankofindia.bank.in/

## திருச்சி-காரைக்கால் ரெயில் சேவையில் மாற்றம்!



திருச்சி, மே. 05–

"திருச்சி கோட்டத்தில் பல்வேறு பிரிவுகளில் பொறியியல் பணிகள் நடைபெறுவதால் பின்வரும் ரெயில்களின் சேவைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன. திருச்சி ஜங்ஷனில் இருந்து காலை 8.40 மணிக்கு புறப்படும் திருச்சி–காரைக்கால் டெமு ரெயில் (வண்டி எண்: 76820) வருகிற 6,7,8,9, 11 மற்றும் 12–ந்தேதிகளில் பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இந்த ரெயிலானது திருச்சியில் இருந்து திருவாரூர் வரை மட்டுமே இயங்கும். மறு மார்க்கமாக காரைக்கால் திருச்சி டெமு ரெயில் (வண்டி எண்: 76819) மேற்கண்ட தேதிகளில் காரைக்கால் –திருவாரூர் இடையே பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இந்த ரெயிலானது திருவாரூரில் இருந்து மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு திருச்சி செல்லும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதேபோல் திருச்சியில் இருந்து மதியம் 1 மணிக்கு புறப்படும் திருச்சி பாலக்காடு டவுன் எக்ஸ்பிரஸ் ரெயில் வருகிற 8, 10 மற்றும் 12–ந்தேதி களில் பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இந்த ரெயிலானது திருச்சியில் இருந்து இருகூர் வரை மட்டுமே இயங்கும். பின்னர் இந்த ரெயிலானது இருகூரில் இருந்து முன்பதிவில்லா சிறப்பு ரெயிலாக பாலக்காடு டவுன் புறப்பட்டு செல்லும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், திருச்சியில் இருந்து மதியம் 3.50 மணிக்கு புறப்படும் திருச்சி –ஈரோடு பாசஞ்சர் ரெயில்(வண்டி எண்:56105) வருகிற 7 மற்றும் 8–ந்தேதிகளில் மாலை 4.50 மணிக்கு புறப்பட்டு செல்லும். இதேபோல் திருச்சியில் இருந்து மதியம் 1 மணிக்கு புறப்படும் திருச்சி பாலக்காடு டவுன் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்: 16843) வருகிற 9–ந்தேதி மதியம் 2 மணிக்கு புறப்பட்டு செல் லும் என அறிவிக்கப்பட்டு உள்ளது."

இந்த தகவலை திருச்சி கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு அதிகாரி வினோத் தெரிவித்து உள்ளார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881



# பதவியை ராஜினாமா செய்த ஸ்டாலின்!



சென்னை மே. 05–

கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட ஸ்டாலின் தோல்வி அடைந்த நிலையில் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். அவர் ராஜினாமா கடிதத்தை கவர்னருக்கு அனுப்பினார்.

இதற்கிடையே சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: நடந்து முடிந்த தமிழக சட்டசபை பொதுத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த தமிழக மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை உண்மை உணர்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவரின் ஒவ்வொரு வாக்கையும் விலைமதிப்பற்ற நம்பிக்கை யாக நான் கருதுகிறேன்.

இப்போது வரை கிடைத்துள்ள புள்ளிவிபரங்களின்படி திமுக கூட்டணிக்கு 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகள் கிடைத்துள்ளன. இம்மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுதல் தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியானது, நம்மை விட 17.43 லட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு சதவீதம் வேறுபாடு என்பது 3.52 விழுக்காடு மட்டுமே. என்னைப் பொறுத்தவரையில் தமிழக மக்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை வலிமையானதாகவே கருதுகிறேன்.

ஆளும் கட்சியாக இருந்தால் மக்களுக்கான திட்டங்களைத் தீட்டுவோம். எதிர்க்கட்சியாக இருந்தால் மக்களுக்கான கோரிக்கைகளுக்காகவே போராடுவோம். அந்த வகையில் இப்போது வலிமையான எதிர்க்கட்சியாக இருந்து மக்களுக்கான அரசியலை நாம் தொடர்வோம். இனம், மொழி, நாடு காக்கும் பயணத்தைத் தொடர்வோம். நமது பயணத்தில் எவரையும் பின்தங்க நான் விட மாட்டேன். மீண்டும் வெல்வோம். இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

## தேர்தல் வெற்றி பெற்ற அதிமுக எம்.எல்.ஏ.க்கள் சென்னைக்கு வருமாறு எடப்பாடி பழனிசாமி அழைப்பு..!!



சென்னை, மே. 05–

தேர்தல் வெற்றிபெற்ற அனைவரும் சென்னைக்கு வரவேண்டும் என கட்சியின் பொதுச்செயலாளர் ஈபிஎஸ் அழைப்பு விடுத்துள்ளார். சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் (06.05.2026)அதிமுக எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெறுகிறது.

# த.வெ.க.வுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காவிட்டால்?



சென்னை, மே. 05–

தமிழக சட்டசபை தேர்தலில் யாரும் எதிர்பாராத வகையில் த.வெ.க. வெற்றி பெற்று, 59 ஆண்டு கால திராவிட கட்சிகளின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. முதல் தேர்தலிலேயே வெற்றி வாகை சூடி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக உயர்ந்துள்ளது.

என்றாலும், தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் அளவுக்கு த.வெ.க.வுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அதாவது, மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 118 தொகுதிகளில் வெற்றி பெற்றால்தான், ஒரு கட்சிக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கும். ஆனால், த.வெ.க. 108 தொகுதிகளில்தான் முன்னிலை வகிக்கிறது. த.வெ.க.வுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில், அடுத்து என்ன நடக்கும் என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

த.வெ.க. தலைவர் விஜய், தான் போட்டியிட்ட பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறார். இதில், ஒன்றை ராஜினாமா செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால், தொகுதிகளின் எண்ணிக்கையில் ஒன்று குறையும். அதேநேரத்தில், அக்கட்சியில் வெற்றி பெற்ற வேட்பாளர்களில் ஒருவர் சபாநாயகராக நியமிக்கப்பட வேண்டும். நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, சபாநாயகர் வாக்களிக்க முடியாது என்பதால், மேலும் ஒரு இடம் குறையும். அப்படி, பார்க்கும்போது, த.வெ.க.வுக்கு பெரும்பான்மையை நிரூபிக்க மேலும் 12 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. தற்போதைய நிலையில், தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு 6 இடங்களும், இரு கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகள் வீதம் 4 இடங்களும், தே.மு.தி.க.விற்கு 1 இடமும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கிற்கு 2 இடங்களும், விடுதலை சிறுத்தை கட்சிக்கு 2 இடங்களும் கிடைத்துள்ளன.

அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.க.விற்கு 4 இடங்களும், பா.ஜ.க.வுக்கு 1 இடமும், அம.மு.க.வுக்கு 1 இடமும் கிடைத்துள்ளன. தி.மு.க., அ.தி.மு.க. இரு கூட்டணிகளிலும் உள்ள பிற கட்சிகளின் ஆதரவு கிடைத்தால், த.வெ.க.விற்கு கூடுதலாக 21 இடங்கள் கிடைக்கும். அதன்படி கணக்கிடும்போது 108+21 என்றளவில் 129 இடங்களை பெற முடியும். ஆனால், அவ்வளவு கட்சிகளின் ஆதரவும் த.வெ.க.வுக்கு தேவையில்லை. 12 உறுப்பினர்களின் ஆதரவே போதுமானது.

இந்த கணக்கு ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் தமிழக கவர்னர் ஆர்.வி.அர்லேகர் நாளை சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகைக்கு வருகை தருகிறார். தமிழகத்தில் ஆட்சி அமைக்க த.வெ.க.வுக்கு 2 வாய்ப்புகளை அவர் வழங்குவார். ஒன்று, த.வெ.க. தலைவர் விஜய்யை அழைத்து, சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க கூறுவார். அல்லது, தனக்கு ஆதரவு தரும் கட்சிகளிடம் இருந்து கடிதங்களை பெற்று, அதை தன்னிடம் வழங்கும்படி சொல்வார். 118 இடங்களுக்கு மேல் ஆதரவு கிடைத்தால், த.வெ.க.வுக்கு ஆட்சி அமைக்கும் உரிமையை கவர்னர் வழங்குவார்.

அவ்வாறு ஆதரவு கிடைக்காமல் போனால், த.வெ.க.வுக்கு ஆட்சி அமைக்கும் உரிமை கிடைக்காமல் போகும். அதுபோன்ற நிலைமை ஏற்பட்டால், இரண்டாவதாக அதிக இடங்களை பெற்றுள்ள தி.மு.க.வை ஆட்சி அமைக்க கவர்னர் கோருவார். அவர்களாலும் ஆட்சி அமைக்க முடியாமல் போனால், அடுத்த 6 மாதங்கள் தமிழகத்தில் கவர்னர் ஆட்சி நடைபெறும். அதன் பின்னர் சட்டசபை தேர்தல் 234 தொகுதிகளுக்கும் மீண்டும் நடைபெறும்.

# எம்.பி. பதவியை ராஜினாமா செய்கிறார் சி.வி.சண்முகம்!



சென்னை, மே. 05–

மயிலம் சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் சி.வி.சண்முகம், தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. சார்பில் வெங்கடேசன், தமிழக வெற்றிக் கழகத்தில் விஜய் நிரஞ்சன், நாம் தமிழர் கட்சியில் விஜய் விக்ரம் உள்பட 21 பேர் போட்டியிட்டனர். தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 9 ஆயிரத்து 16 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஒரு லட்சத்து 87 ஆயிரத்தது 360 பேர் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர். அதேபோன்று 2,009 தபால் ஓட்டுகளும் பதிவானது. இதன் மூலம் மொத்தம் 89.64 சதவீதம் வாக்குகள் பதிவாகி இருந்தது.

இங்கு பதிவான வாக்குகள் திண்டிவனத்தில் உள்ள அண்ணா பல்கலைக்கழக என்ஜினீயரிங் கல்லூரியில் உள்ள மையத்தில் எண்ணப்பட்டது. இதில் அ.தி.மு.க. வேட்பாளர் சி.வி. சண்மு கம் 82 ஆயிரத்து 353 வாக்குகள் பெற்று வெற்றிப்பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட த.வெ.க. வேட்பாளர் நிரஞ்சன் 52 ஆயிரத்து 312 வாக்குகள் பெற்று 2–வது இடமும், தே.மு.தி.க. வெங்கடேசன் 46 ஆயிரத்து 267, நா.த.க. விஜய்விக்ரம் 4,386 வாக்குகளும் பெற்றனர். இந்த நிலையில், மயிலம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்றதை தொடர்ந்து அதிமுக வேட்பாளர் சி.வி.சண்முகம் தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய உள்ளார்.

# என்னை தொட்டதற்கு வருத்தப்படுவீர்கள்: சொன்னதை செய்து காட்டிய விஜய்!



சென்னை. மே. 05–

த.வெ.க., தலைவர் விஜய், தான் பங்கேற்ற அனைத்து கட்சி கூட்டங்களிலும், பிரசாரங்களிலும், 'தி.மு.க., விற்கும், த.வெ.க.,விற்கும் இடையில்தான் போட்டி' என, ஆணித்தரமாக கூறி வந்தார்.

கரூரில் அவரது பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, குழந்தைகள், பெண்கள் உட்பட, 41 பேர் இறந்தனர். இதனால், ஒரு மாதமாக, தனது வீட்டில் இருந்து வெளியே வராமல், துக்கத்தில் முடங்கினார்.

தி.மு.க.,வினர் செய்த சதி செயல் காரணமாக, கரூர் சம்பவம் நடந்ததாக, த.வெ.க., தரப்பில் புகார் கூறப்பட்டது. சி.பி.ஐ., விசாரணையில் ஆஜரானபோது, விஜய், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர், இந்த குற்றச்சா ட்டை முன்வைத்தனர்.

இந்த சம்பவத்திற்கு பின், முதல்வர் ஸ்டாலினுக்கு, விஜய் நேரடியாக சவால் விட்டார். 'விஜயை ஏன் தொட்டோம் என, தேர்தலுக்கு பின் வருத்தப்படுவீர்கள்' எனக் கூறி வந்தார்.

அதை நிரூபிக்கும் வகையில், இத்தேர்தலில் வரலாறு காணாத வெற்றியை விஜய் பெற்றுள்ளார். ஆளும் கட்சியாக இருந்த, தி.மு.க., தோல்வி அடைந்தது. 'தி.மு.க., 2.0' எனக் கூறி வந்த, முதல்வர் ஸ்டாலின் போட்டியிட்ட, கொளத்துார் தொகுதியில், படு தோல்வி அடைந்தார். விஜய் தனது சவாலில் வென்று விட்டார் என, த.வெ.க.,வினர் பெருமி தம் அடைந்து உள்ளனர்.

# சினிமாவில் இருந்து முழுமையாக விலகும் விஜய்?



சென்னை, மே. 05–

தேர்தலில் பெரும் வெற்றி பெற்றதால், சினிமாவில் இருந்து முழுமையாக விலகும் முடிவை, த.வெ.க., தலைவர் விஜய் எடுத்துள்ளார்.

இதுகுறித்து, த.வெ.க., வட்டாரங்கள் கூறியதாவது: நடிகர் விஜய், 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் த.வெ.க., எனும் கட்சியை தொடங்கினார். அந்த சமயத்தில், ஜனநாயகன் படத்தில் நடித்து வந்த விஜய், 'இதுதான் எனது கடைசி படம்' என அறிவித்தார்.

ஆனால், ஜனநாயகன் தியேட்டரில் ரிலீஸ் ஆகும் முன்பாக, இணையதளத்தில் கசிந்தது. இதனால், படக்குழுவுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அதேநேரத்தில், தேர்தலில் முழுமையான வெற்றி பெற வாய்ப்பில்லை என, விஜய் கருதினார்.

இதனாலும், படக்குழுவுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டவும், மீண்டும் சினிமாவில் நடிக்க விஜய் திட்டமிட்டார். ஆனால், எதிர்பாராத விதமாக, த.வெ.க., பெரும் வெற்றி பெற்றுள்ளது. எனவே, இனி சினிமாவில் விஜய் நடிக்க முடியாது என்பதால், படக்குழு நஷ்டத்தை ஈடுகட்ட, வேறு வழியில் முயற்சி செய்யப்படும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறின.

# கம்யூனிஸ்ட் ஆட்சி இல்லாத இந்தியா.. 50 ஆண்டுகளில் முதல் முறை..!



சென்னை, மே. 05–

தமிழ்நாட்டு தேர்தல் முடிவுகளுக்கு சற்றும் குறைவில்லாமல் கேரளா சட்டமன்றத் தேர்தல் முடிவுகளும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கேரளாவில் ஆட்சி மாற்றம் உறுதியாகியுள்ளது. கேரள சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (UDF) மொத்தம் உள்ள 140 இடங்களில் 99 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது...

கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி (எல்டிஎஃப்) இரண்டு முறை தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த பிறகு தற்போதையை தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. 2016 முதல் ஆட்சியில் இருந்த எல்டிஎஃப் அரசு தற்போது அரியணையை விட்டு இறங்கியுள்ளது. கேரளா இதுவரை இடதுசாரி அரசியலின் வலுவான தளமாகக் கருதப்பட்டது. ஆனால் இந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்வி இந்திய அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது.

கடைசி கோட்டை கேரளா இடதுசாரி அரசியலுக்கு மிகவும் முக்கியமானது. மேற்கு வங்கம், திரிபுரா போன்ற மாநிலங்களில் இடதுசாரிகள் ஆட்சியை இழந்த பிறகும், கேரளா மட்டும் தொடர்ந்து இடதுசாரிகளுக்கு வலுவான ஆதரவைத் தந்து வந்தது. இதனாலேயே கேரளா இடதுசாரிகளின் 'கடைசி கோட்டை' என்று அழைக்கப்பட்டது. இதன் மூலம் 1977–க்குப் பிறகு முதல் முறையாக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இடதுசாரி அரசு இல்லாத நிலை உருவாகியுள்ளது.

# எதிர்க்கட்சி தலைவராகும் உதயநிதி?



சென்னை, மே. 05–

நடந்து முடிந்த தமிழக சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 233 தொகுதிகளில் தனித்து போட்டியிட்ட த.வெ.க. 108 இடங்களில் வெற்றி பெற்று தமிழக அரசியலில் வரலாற்று சாதனை படைத்துள்ளது. இருப்பினும் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமையும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, மீண்டும் ஆட்சியை பிடிப்போம் என்ற அயராத நம்பிக்கையில் இருந்த தி.மு.க. 54 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சியாக அமைய உள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக உதயநிதி ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. விஜயை எதிர்க்க உதயநிதி சரியான ஆளாக இருப்பார் என தி.மு.க. தலைமை கருதுவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் இது தொடர்பான அறிவிப்புகள் விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வாழ்த்துகள் நண்பா... வரலாறு படைத்து விட்டாய்! விஜய்க்கு சினிமா பிரபலங்கள் வாழ்த்து மழை!



சென்னை, மே. 05–

தமிழக தேர்தலில் வெற்றி பெற்ற நடிகரும், த.வெ.க., கட்சி தலைவருமான விஜய்க்கு திரையுலகினர் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நடிகர் விக்ரம் ஓட்டு போடும் போது, வெள்ளை சட்டை, காக்கி பேன்ட் அணிந்து வந்தபோதே, அவர் த.வெ.க.,வுக்கு தான் ஓட்டு போட்டார் என்பது தெரிந்தது. இந்நிலையில் விஜய் வெற்றிக்கு, 'எக்ஸ்' தளத்தில், விஜயுடன் உள்ள போட்டோவை பகிர்ந்து, 'வாழ்த்துகள் நண்பா... இன்று ஒரு வரலாறு படைத்து விட்டாய்' எனக் கூறி, வாழ்த்தியுள்ளார்.

நடிகர் சிவகார்த்திகேயன்: போட்டியிட்ட முதல் தேர்தலில் இவ்வளவு பெரிய தாக்கத்தை, மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, இந்த வெற்றியை பெற்றிருக்கும் விஜய் சாருக்கு வாழ்த்துக்கள். நீங்கள் திரைத்துறையை சார்ந்தவர் என்பதில் கூடுதல் மகிழ்ச்சி. பணி சிறக்க வாழ்த்துகள்.

நடிகர் ரவி மோகன்: இது வெறும் வெற்றி மட்டுமல்ல. நம்பிக்கையால் முத்திரையிடப்பட்ட ஒரு புரட்சி. நாங்கள் எப்போதும் உங்களுடன் இருக்கிறோம். முன்னேறி செல்லுங்கள்; எதிர்காலம் உங்களுக்கு சாதகமாக தெரிகிறது.

நடிகர் கவின்: ஒரு மனிதன், ஒரு கட்சி, இப்படியான ஓட்டு சதவீதம். வரலாறு உருவாகிக் கொண்டிருக்கிறது. நம் காலத்தில் இதை நேரில் கண்டதற்கு மகிழ்ச்சி.

நடிகர் சூரி: இந்த மா பெரும் வெற்றிக்கு மனமார்ந்த வாழ்த்துகள். விஜயும் அவரது குழுவினரும் பொது சேவையில் மேலும் உயர்ந்து, எண்ணற்ற மைல்கற்களை அடைய நல்வாழ்த்துகள்.

நடிகை காஜல் அகர்வால்: உத்வேகம் தரும் இந்த புதிய அத்தியாயத்தில், நீங்கள் அடியெடுத்து வைக்கும்போது, உங்களுக்கு மிகுந்த வலிமையும் வெற்றியும் கிடைக்க வாழ்த்துகிறோம். பலரும் எதிர்பார்க்கும் மாற்றத்தை நீங்கள் கொண்டு வருவீர்களாக.

நடிகை மஞ்சிமா மோகன்: முழுமையான, அதுவும் அற்புதமான வெற்றி. ஒரு ரசிகையாக இந்த வெற்றி, எனக்கு மிகவும் சிறப்பாக உணரப்படுகிறது. இது இன்னும் பல வெற்றிகளுக்கான தொடக்கம் என்று மட்டுமே நான் நம்புகிறேன்.

நடிகை வரலட்சுமி சரத்குமார்: ஒரு விரல் புரட்சி. விசில் போடு. பலர் பல தசாப்தங்களாக முயன்றுள்ளனர். ஆனால், மக்கள் விரும்பினால், அதிகாரம் அவர்களுடையது என்பதை, நிரூபித்துள்ளீர்கள். தமிழர்களின் மாற்றமும் வளமும் விரைவில் வரும் என எதிர்பார்க்கிறேன்.

தெலுங்கு நடிகர் ரவி தேஜா: இந்த மாபெரும் வெற்றிக்கு வாழ்த்துக்கள். அந்த சக்திவாய்ந்த புதிய கட்டடத்திற்குள் நீங்கள் அடியெடுத்து வைக்கும் போது, உங்களுக்கு வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன். தொடர்ந்து முன்னின்று வழி நடத்துங்கள்.

தெலுங்கு நடிகர் சந்தீப் கிஷண்: என் தளபதி வெற்றி கொண்டார்.

தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டா: புதிய முதல்வருக்கு வாழ்த்துகள். தங்களுக்காகக் குரல் கொடுத்து, இவ்வளவு வலுவாக ஓட்டளிக்கத் திரண்ட தமிழக மக்களுக்கு என் பாராட்டுகள். தமிழக அரசியலின் இந்தப் புதிய கட்டத்தையும், முகத்தையும் காண ஆவலாக உள்ளேன்

நடிகர் ஷாம்: யாரு கிட்ட...

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020